**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 43/2020** **D.W. 2**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha,Assistant of this court on 01.09.2026 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | சங்கர் |
| Father Name : | கதிர்வேல் |

**2, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கை யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது தாயாரான சின்னக்கன்னு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அவரது இறப்பிற்கு பின்னிட்டு நாங்கள் இவ்வழக்கை நடத்தி வருகிறோம். இவ்வழக்கு சொத்து எங்கு உள்ளது மற்றும் எவ்வளவு விஸ்தீரணத்தை கொண்டது என்றால் தேவராயபுரம் கிராமத்தில் உள்ள 2 3/4 ஏக்கர் தாவா சொத்தாகும். தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சக்குபந்தி என்னவென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து தற்போது யார் அனுபவித்து வருகிறார் என்றால் தாவா சொத்து காடாக உள்ளது, 5 வாரிசுகளுக்கும் கூட்டாக உள்ளது. மேற்படி 5 வாரிசுகள் யார் என்றால் பெரியசாமி, சடையன், பாப்பம்மாள், நாகம்மாள், சின்னக்கண்ணு ஆகியோர்களுக்கு வாரிசு அடிப்படையில் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தாகும். கடந்த 30.11.1964 தேதியில் 2ம் பிரதிவாதியின் தாத்தா பெரியசாமி, முத்துசாமி மகன் ராமசாமி என்பவரிடமிருந்து ச.எண்.58/2ல் 18 1/2 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் 09.03.1965 தேதியில் மேற்படி பெரியசாமி, முத்துசாமியின் மற்றொரு மகனான பெருமாள் என்பவரிடமிருந்து ச.எண்.58/2ல் 18 1/2 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்தின் சுவாதீனம் இன்றைய தேதியிலிருந்து எவ்வளவு ஆண்டிற்கு முன்பு வரை தெரியும் என்றால் சுமார் 45 வருடங்கள் தாவா சொத்தின் சுவாதீனத்தைப் பற்றி தெரியும். மேற்படி பெரியசாமி எனக்கு என்ன உறவுமுறை என்றால் தாய்மாமன் உறவுமுறையாகும். மேற்படி பெரியசாமி 1964, 1965 ஆண்டில் கிரையம் பெற்ற சொத்துக்களை தனது பேரனான தமிழ்செல்வனுக்கு கடந்த 06.06.2011 தேதியன்று ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்திற்கு பிறகு மேற்படி 37 செண்ட் நிலத்தின் வருவாய் ஆவணங்கள் மேற்படி தமிழ்செல்வன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது மேற்படி 37 செண்ட் நிலம் மேற்படி தமிழ்செல்வனின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாணப்பத்திரத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் பத்திரங்களின் நகலை எடுத்துப்பார்த்து வழக்கறிஞர் சொல்லி அதை நான் சரிபார்த்து தயாரிக்கப்பட்டது. பரமத்தி அங்காளபரமேஸ்வரி கோவிலில் எவ்வளவு ஆண்டுகளாக பூசாரியாக இருந்து வருகிறேன் என்றால் சுமார் 25 வருடங்களாக தேவராயபுரத்தில் உள்ள எனது தம்பி வீட்டில் தங்கி கோவிலுக்கு சென்று வருகிறேன். சுமார் 25 வருடங்களுக்கு முன்பு தேவராயபுரம் கிராமத்தை விட்டு நான் வெளியே சென்றுவிட்டதால் தாவா சொத்து யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் மேற்படி 5 நபர்கள் வாரிசுகள் தாவா சொத்தின் கூட்டுசுவாதீனத்தில் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி 5 நபர்களும் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. உயிருடன் இல்லாத நபர்கள் தாவாசொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாக நான் சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 5 நபர்களின் உயிருடன் உள்ள வாரிசுதாரர்கள்தான் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள். 2ம் பிரதிவாதியான தமிழ்செல்வன் பெரியசாமியின் வாரிசு என்றால் அவரது மகன் வழி பேரனாவார். மேற்படி தமிழ்செல்வனின் தந்தை பெயர் என்னவென்றால் ஜெயராமன் ஆவார். மேற்படி ஜெயராமன் மேற்படி பெரியசாமியின் நேரடி வாரிசு என்றால் சரிதான். தாவா சொத்தின் சுவாதீனத்தை பற்றி 45 வருடங்களாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**Sd/-E.Ridhula**
**DM,SDM.**

**Sd/-Sankar(DW2)**